**செ.வெ.எண்.193/2018** **நாள்: 11.05.2018**

**காஞ்சிபுரம் மாவட்ட நிர்வாகம் மற்றும் சென்னை, காஞ்சிபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் இணைந்து நடத்திய தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்தத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்கள் தேர்வான 243 நபர்களுக்கு பணிநியமன ஆணையினை வழங்கினார்.**

காஞ்சிபுரம் மாவட்டம், ஒக்கியம்துரைப்பாக்கம் டி.பி.ஜெயின் கல்லூரியில் காஞ்சிபுரம் மாவட்ட நிர்வாகம் மற்றும் சென்னை, காஞ்சிபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் சார்பில் இளைஞர்களுக்கான தனியார் வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது. இம்முகாமில் மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்தத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்கள் பங்கேற்று, வேலைவாய்ப்பு முகாமினை தொடங்கி வைத்து, தேர்வான நபர்களுக்கு பணிநியமன ஆணையினை வழங்கினார்.

இப்பயிற்சி முகாமில் தனியார் வேலையளிக்கும் நிறுவனங்கள் மற்றும் தனியார் வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்களான அட்மேச் ஆட்டோ இந்தியா லிமிடெட், யூனிடெக் ப்ளாஸ்டோ, சாரதா மோட்டார் இண்டர்ஷிஸ் லிமிடெட், ஜி4எஸ் செக்யூர் சொலிசன்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட், பி.ஏ.ஏ.எஸ். பப்ளிகேசன்ஸ், கோ-டெக் சொலிசன்ஸ், டி.வி.எஸ். டிரைனிங் அண்டு சர்வீஸ், எவர்கிரீன் மேனேஸ்மெண்ட் சர்வீஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், மெட்ராஸ் செக்யூரிட்டி சர்வீஸ், வி.எஸ். ஆஸ்பிடல்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், எஸ்.வி.எம். பிரைவேட் லிமிடெட், லைப்ஸ்டைல் இண்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட் உட்பட 115 தனியார் நிறுவனங்கள் பங்கேற்றன. இம்முகாமில் 1394க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். முகாமின் நிறைவில் தேர்வான 243 நபர்களுக்கு நேரிடையாக பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டது.

இப்பயிற்சி முகாமில் செய்தியாளர்களிடம் பேசிய மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்தத்துறை அமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டில் 78 லட்த்து 90 ஆயிரத்து 322 பேர் வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ளனர். காஞ்சிபுரம் மாவட்டத்தில் மட்டும் 3 லட்சத்து 13 ஆயிரத்து 801 பேர் பதிவு செய்துள்ளனர். இந்த இளைஞர்களின் நலனுக்காக பாடுபடும் இந்த தமிழக அரசு இதுபோன்ற தனியார் துறை சிறப்பு வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, 2 லட்சத்து 22 ஆயிரத்து 656 பேர் தனியார் துறைகளில் வேலைவாய்ப்பை பெற்றுள்ளனர். இதில் காஞ்சிபுரம் மாவட்டத்தை சேர்ந்தவர்கள் 6 ஆயிரத்து 299 பேர் ஆவார்கள்.

இங்கு நடைபெறும் இந்த வேலைவாய்ப்பு முகாமில் 115 தனியார் நிறுவனங்கள் பங்கேற்றுள்ளன. 1392 பேர் வேலைவாய்ப்பு பெறுவதற்கு பதிவு செய்துள்ளனர். இதில் 243 இளைஞர்களுக்கு பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. மிக முக்கியமாக இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு பெறுவதற்கான பயிற்சியை கொடுப்பதற்கும், இளைஞர்களின் வாழ்வாதாரத்திற்கு வேலைவாய்ப்பை பெறுவதற்கு உரிய நிலையை அவர்களுக்கு உருவாக்கும் வகையில் இப்பயிற்சி நிறுவனங்கள் மூலம் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படும். இதுவரை தமிழ்நாட்டில் 3 லட்சத்து 79 ஆயிரத்து 619 இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவுபெற்ற அனைவருக்கும் அரசு வேலை வழங்குவது கடினம். அரசு துறைகளில் எந்தெந்த நிலையில் காலி பணியிடங்கள் உருவாகின்றனவோ உடனடியாக அவை நிரப்பப்படுகின்றன. இருப்பினும், இளைஞர்கள் சுய தொழில் புரிவதற்கு அரசு பல்வேறு சலுகைகளை வழங்கி வருகிறது. அந்த வாய்ப்புகளை இளைஞர்களை பயன்படுத்தி சுய தொழில் தொடங்கி, பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைவது மட்டுமின்றி, மற்றவர்களுக்கு வேலைவாய்ப்பை தர முடியும். வெளிநாட்டிற்கு வேலை செய்ய செல்போரின் நலனை காக்க அயல் வேலைவாய்ப்பு நிறுவனம் 1978ஆம் ஆண்டு மாண்புமி மறைந்த முன்னாள் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களால் நிறுவப்பட்டது. இந்த அரசு பதவியேற்ற நாள் முதல் இன்று வரை 2225 நபர்கள் பல்வேறு வேலைகளுக்கு வேலைநாடுகளில் வேலைவாய்ப்பை பெற்று பயன்பெற்றுள்ளனர். வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு வழங்கிட அரசின் அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்களுக்கு இங்கு நடைபெற்ற முகாமில் 12 பேர் இதுவரை மனு அளித்துள்ளனர்.

இளைஞர்கள் அரசின் வேலைவாய்ப்பு போட்டித் தேர்வுகளில் பங்கேற்க வசதியாக திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சிக்காக இந்த அரசு பதவியேற்றப் பின்னர் ஒவ்வொரு மாவட்ட அலுவலகத்திற்கும் ரூ.3 லட்சத்து 15 ஆயிரம் ஆண்டு ஒன்றுக்கு செலவிடப்படுவதுடன் ரூ.1 கோடி செலவிடப்பட்டுள்ளது. கடந்த 7 வருடங்களில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் 86 ஆயிரத்து 311 பேர் அரசுத்துறைகளில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். வேலைவாய்ப்பற்றோருக்கான உதவித்தொகை 2017 முதல் இரட்டிப்பாக உயர்த்தப்பட்டு, கடந்த 7 ஆண்டுகளில் 158.71 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.100 கோடி வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 5 லட்சத்து 79 ஆயிரத்து 882 பொது பதிவுதாரர்களும், 1 லட்சத்து 61 ஆயிரத்து 20 மாற்றுத்திறனாளிகளும் பயன்பெற்றுள்ளனர். அரசின் சார்பில் 10 கலை மற்றும் அறிவியல் பல்கலைகழங்களில் பயிலும் ஏழை மாணவர்கள் பயன்பெறும் வகையில் கட்டணம் இல்லா பயிற்சி வழங்கும் மையங்கள் ஏற்படுத்த ரூ.50 லட்சம் அரசாங்கம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.ஜெ.ஜெயவர்தன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.சிட்லப்பாக்கம் சி.ராஜேந்திரன், வேலைவாய்ப்புத்துறை மண்டல இணை இயக்குநர் திருமதி.வே.மீனாட்சி, வேலைவாய்ப்புத்துறை இணை இயக்குநர் திருமதி.க.சத்தியபாமா, கல்லூரி முதல் முனைவர்.ஆர்.பி.பங்கஜா, முன்னாள் கல்லூரி முதல்வர் முனைவர்.சக்திவேல் முருகன், சென்னை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் துணை இயக்குநர் திரு.எம்.சந்திரன், காஞ்சிபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் துணை இயக்குநர் திரு.ஆர்.அருணகிரி மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் உள்ளனர்.

**செய்தி வெளியீடு,**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**

**காஞ்சிபுரம் மாவட்டம்.**